ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலத்துறை – திட்டப் பணிகள் – உயர் மட்டக் குழுவின் பரிந்துரைகள் – ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு பொறுப்புரிமை ஒப்படைப்பு செய்து அதிகாரங்கள் வழங்கல்.

---

ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நல (ஆதிந6)த் துறை

அரசாணை (நிலை) எண்.148 நாள்.26.12.2007

படிக்கப்பட்டது:

1. அரசு ஆணை எண்.85, ஆதி (ம) பந துறை, நாள் 14.7.1979.
2. ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ்யத் துறை, செயலரின் நேர்முக கடித எண்.30462/சி1/2006, நாள்.9.11.2007.

**ஆணை**

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட நேர்முகக் கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ்ஜியம் துறைச் செயலர், உயர் நிலைக் குழுவின் பரிந்துரைகள் தொடர்பாக, ஆதி திராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலத் துறையின் கீழ்க்கண்ட திட்டப்பணிகளுக்கு ஊரக மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்கு பொறுப்புரிமை ஒப்படைப்பு செய்து அதிகாரம் வழங்கி ஆணையிடும்படி விடுத்த கோரிக்கையினை அரசு ஆய்வு செய்து கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.

(1) அரசால் வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.85, ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலத்துறை, நாள் 14.7.1999ன் படி கிராம பஞ்சாயத்துத் தலைவர்கள், பள்ளிகள் மற்றும் விடுதிகளைப் பார்வையிட அதிகாரம் அளித்து வெளியிடப்பட்ட ஆணையினை மீண்டும் வலியுறுத்தி அரசு ஆணையிடுகிறது.

(2) தனிநபர் பயனாளிகள் பயன்பெறும் திட்டத்தின் கீழ் தனிநபர் பகுத்தறிவுப் பயிற்சி (Oriented Schemes of TAHDCO) வழங்கத் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களை தேர்ந்தெடுத்து தெரிவிக்க, கிராம பஞ்சாயத்துக்கு அதிகாரம் வழங்கவும், தாட்கோவின் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தாட்கோ நிர்வாகம், கிராமப் பஞ்சாயத்தால் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களை தேர்ந்தெடுக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்படும் நபர்களின் பட்டியல் விபரம் கிராமச்சபைகளுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

(3) ஆதிதிராவிட/பழங்குடியின மக்களுக்கு இலவச மனைப்பட்டா வழங்க தனித்தாசில்தார் தேர்ந்தெடுத்த நபர்களின் பட்டியலோடு கிராம பஞ்சாயத்தால் தேர்ந்தெடுக்கப்படும் நபர்களின் பட்டியலையும் சரிபார்த்து சட்டத்திட்டங்களுக்குட்பட்டு பட்டா வழங்குதல் வேண்டும்.

(4) விடுவிக்கப்படும் கொத்தடிமைகள் குறித்தும் அவர்களின் மறுவாழ்வு குறித்தும் பணிகளை மேற்பார்வையிடும் அதிகாரம் சம்மந்தப்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளுக்கு வழங்க படுகிறது.

(5) தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் வழங்கப்படும் ஊக்கத்தொகை சில கிராமங்களில் முனைவர்களால் வழங்கப்படுவதை மேற்பார்வையிடும் அதிகாரம் கிராமப் பஞ்சாயத்துகளுக்கு வழங்க படுகிறது.

(6) தற்போதுள்ள கிராமப் பஞ்சாயத்து குழுக்களில் ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நலத்துறையின் திட்டங்களை செயல்படுத்த ஆதிதிராவிடர் (மற்றும்) பழங்குடியினர் நல உறுப்பினர்களை மேற்சொன்ன கிராம பஞ்சாயத்துகளில் உறுப்பினர்களாகத் தேவைப்படின் நியமனம் செய்யலாம்.

2. இயக்குநர், ஆதிதிராவிடர் நலத்துறை, இயக்குநர் பழங்குடியினர் நலத்துறை மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ்ய துறையின் கீழ் செயல்பட்டு வரும் உயர்நிலைக் குழுவின் மூலம், இத் துறையின் மேற்சொன்ன திட்டங்களினை ஊரக மற்றும் உள்ளாட்சி மன்றங்களுக்கு, அரசால் வழங்கப்பட்ட பொறுப்புரிமை அதிகாரங்களை ஏற்று செயல்படுத்துமாறும், இது குறித்து மாதாந்திர கால முறை, முன்னேற்ற

அறிக்கையினை ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ்யத்துறை மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைகளுக்கு தவறாது அனுப்புமாறும் அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**வ. கனகராஜ்**
அரசு செயலர்